**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

OS 152/2019

24.10.2025.

DW - 2

பி.வா.சா.2. தமிழ்வேந்தன், த/பெ. சுந்தரராஜன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்து விவரங்களில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான். எதிர் வழக்குரைக்கு விவரங்களை என் தாயார் தான் சொன்னார். நான் சொல்லவில்லை. என் அம்மாவை கேட்டால் தான் முழு விவரங்கள் தெரியும் என்றால் - எனக்கும் தெரியும். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உறவுமுறைகள் சரிதான். எனது பெரியப்பா வடிவேல் மைனராக இருந்தபோது அவரது பெயரில் எனது தாத்தா சொத்து வாங்கிய விவரம் எனக்கு தெரியும். விற்றவருக்கு தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் - தெரியும். தாய் பத்திரத்தில், ஒரு தொகைக்காக பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் - தெரியாது. தாவா சொத்துக்களுக்கான தொகை அனைத்தையும் எனது தாத்தா தான் கொடுத்துள்ளார் என்றால் - சரிதான். எனது அப்பா எந்த வருடத்தில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார் என்ற விவரத்தினை எனது நிருபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். என் அப்பா மாத சம்பளமாக எவ்வளவு வாங்கினார் என்ற விவரமும் எனது நிருபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் - சரிதான். அரசு ஊழியராக இருப்பவர்கள் அசையா சொத்து கிரயம் பெறும்போது அவரவர் வேலை செய்யும் துறையினரிடம் அனுமதி பெறவேண்டும் என்றும் அவ்வாறு என் அப்பா அனுமதி பெற்றாரா என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா, கூட்டுறவு சங்கத்தில் எந்த தேதியில், எவ்வளவு தொகை கடனாக பெற்றார் என்ற விவரமும் அதற்கு என்ன ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற விவரமும் நிருபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் - சரிதான். என் பெரிய வடிவேல் ஒரு வெளிநாட்டு வாழ் இந்தியர் என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் வெளிநாட்டு வாழ் இந்தியர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. என் அப்பா, எந்தவொரு பணபரிவர்த்தனையும் இல்லாமல், வாதிகளுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்காக என் அப்பாவும் எனது பெரியப்பாவும் கூட்டாக சேர்ந்து பெயரளவில் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் தான் என் அப்பா பெயரில் உள்ள கிரய பத்திரம் என்றால் - சரியல்ல. என் அப்பாவினால் கிரயம் பெறப்பட்டிருக்குமானால்

துறை அனுமதியும் பண பரிவர்த்தனையை குறித்து எனது நிருபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் - சரியல்ல. 30 வருடங்களுக்கு கட்டப்பட்ட கட்டிடத்தின் வரைபடம் மற்றும் அனுமதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். வழக்கு தாக்கல் செய்தபின்னர் கட்டப்பட்ட வீடு என்பதால் தான் அது குறித்து வாதியால் வழக்குரையில் கூறப்படவில்லை என்றால் - சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதுக்கும் பண பரிவர்த்தனை எனது தாத்தாவினால் செய்யப்பட்டுள்ளதால், வழக்கு சொத்து எப்போதும் இறந்த வடிவேல் அவர்களின் தனிப்பட்ட சொத்தாகாது என்றால் - சரியல்ல. வாதி வழக்குரையோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் - பார்வையிட்டேன். தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கு சொத்து குடும்ப பூர்வீக சொத்து என்பதால் வாதி கோரியுள்ள 1/5 பாகம் வாதிக்கு உண்டு என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை சேர்த்து விற்பனை செய்வதற்கு வடிவேலுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அப்படி விற்பனை செய்யப்பட்ட கிரய ஆவணம் வாதியின் பாக வீதத்தை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கு பாக வீதம் உண்டு என்றும் அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் - சரியல்ல. வாதி தாவா சொத்தின் மதிப்பீட்டை சரியாக கணக்கிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்துக்கள் தவிர வேறு எந்த குடும்ப பொது சொத்துக்கள் இல்லை என்றால் - சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் அதனை குறிப்பிட்டு எதிர் வழக்குரையில் சொல்லியிருப்போம் என்றால் - சரியல்ல. பொது குடும்பத்தில் நடைப்பெற்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் என் அம்மாவிற்கு தான் தெரியும் என்றாலும் அவரை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக தான் திட்டமிட்டு என் தாயாரை விசாரிக்கவில்லை என்றால் - சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் தாவா வழக்கு தீர்ப்பு செய்யப்படவேண்டும் என்றாலும் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.